பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆவணி 31 | திங்கட்கிழமை | 18.09.2023 | அதிர்வு 48

## துப்பாக்கிச்சூட்டில் 6 வயது சிறுமி சாவு

### தந்தை படுகாயம்

கொழும்பில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 வயது சிறுமி உயிரிழந்துள்ளதுடன் அவரின் தந்தை படுகாயமடைந்துள்ளனர். 03

# திலீபன் ஊர்தி மீதான தாக்குதல்; பின்னணியில் புலனாய்வுப் பிரிவு

### பொலிஸாரும் உடந்தை என்று முன்னணி குற்றச்சாட்டு

– எஸ்.நிதர்ஷன் –

தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படத்தை சுமந்து வந்த வாகனப் பேரணி மீதும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது இலங்கையின் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட ஒன்று என அந்தக் கட்சியின் பேச்சாளர் சட்டத்தரணி கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்று சிங்களக் காடையர் கும்பலால் மேற்கொள்ளப்பட்ட 03



### திருமலையில் கஜேந்திரன் எம்.பி. மீது

# தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாகக் கைது செய்க!

### அரசிடம் சுமந்திரன் எம்.பி. வலியுறுத்து



– சீ.ஏ.தமிழ்மாறன் –

“திருகோணமலையில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது மிலேச்சத்தனமான முறையில் தாக்குதல் நடத்தியவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன்பாக நிறுத்த வேண்டும்.” 06





## அரசியல் தலைவர்களுக்கு ஜே.ஆர். சிறந்த வழிகாட்டி

### ஜனன தின நிகழ்வில் கரு தெரிவிப்பு

தற்போதைய அரசியல் தலைவர்களுக்கு ஜே.ஆர். ஜெயவர்தன சிறந்த முன்னுதாரணம் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய 03

## தென்மராட்சி விபத்தில் வயோதிபர் ஒருவர் பலி


– தென்மராட்சி நிருபர் –

யாழ். தென்மராட்சியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் – கச்சாய் வீதியில் ஒட்டங்கேணி பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் அதே பகுதியைச் சேர்ந்த துரைசாமி தெய்வேந்திரநாதன் என்ற 75 வயதான வயோதிபரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் 9 மணியளவில் சைக்கிளில் பயணித்த அந்த வயோதிபர் வீதியைக் கடக்க முயன்றபோது எதிர்த்திசையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதியுள்ளது. 06

## இரகசியம்



கொழும்புக்கான இந்தியத் தூதர் புதிதாக நியமிக்கப்படுகின்றார்.

இந்தியாவின் கடைக்கண் பார்வை விழுந்தால் மட்டுமே நமக்கு நிம்மதித் தீர்வு கிட்ட முடியும் என்று தீர்மானித்து விட்ட நமது அரசியல் தலைமைகள், புதிய இந்தியத் 03

# உத்திக பிரேமரத்ன எம்.பியின் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு!



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன பயணித்த வாகனம் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிச்சூடு மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உத்திக பிரேமரத்ன எம்.பி. அநுராதபுரத்தில் உள்ள அவரது இல்லத்துக்குச் சென்றுகொண்டிருந்தபோது வாகனத்தில் வந்த இனந்தெரியாத நபர்கள் அவரது வாகனத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

எனினும், அவர் காயமின்றி தப்பியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சலே, நிலந்த ஜெயவர்த்தன பதவியில் இருக்க விசாரணையை முன்னெடுப்பதில் பயனில்லை!

## ஐக்கிய மக்கள் சக்தியின் லக்ஷ்மன் கிரியெல்ல கருத்து

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக சனல்-4 ஊடகம் வெளியிட்டுள்ள காணொலி தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாம் தலைமையில் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழுவை முழுமையாக நிராகரிப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளார்.

சனல்-4 ஊடகம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள காணொலி சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஐ.இமாம் தலைமையில் ஓய்வுபெற்ற விமானப்படைத் தளபதி ஜயலத் வீரக்கொடி மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ சோசா ஆகியோர் தலைமையிலான மூவரங்கிய குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக சனல்-4 வெளியிட்டுள்ள காணொலின்உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாக சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது.

இந்நிலையில், கருத்து வெளியிடும்போதே அக்கட்சியின் முக்கியஸ்தரான லக்ஷ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் சம்பந்தமாக ஏற்கனவே நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கு அடுத்தபடியாக, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

இவற்றை விடவும், பொலிஸார், படையினர் உள்ளிட்டவர்களும் சில விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். ஆனால், இதுவரையில் உண்மைகள் முழுமையாக கண்



டறியப்படவில்லை.

குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் அடையாளப்படுத்தப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு பொறுப்புக்கூறப்படவில்லை.

இவ்வாறான நிலையில் தற்போது மீண்டும் ஒரு தடவை விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதியால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

அந்த விசாரணைக்குழுவினை நாம் முழுமையாக நிராகரிக்கின்றோம். அந்தக் குழுவானது காலத்தினை இழுத்தடிக்கச் செய்வதற்கான ஜனாதிபதியின் நோக்கத்தினையே நடைமுறைப்படுத்தும் என்றே கருதுகின்றோம். ஆகவே, இந்த விடயத்தில் சர்வதேச விசாரணையொன்றை முன்னெடுப்பதே பொருத்தமானதாகும்.

மேலும், விசாரணைக் குழுக்களை அமைப்பதற்கு முன்னதாக தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்ச்சைக்குள்ளாகியுள்ள அதிகாரிகளான சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜெயவர்த்தன, அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் சுரேஷ் சலே ஆகியோரை பதவி நீக்கம் செய்ய வேண்டும்.

அவ்வாறான செயற்பாடுகள் ஊடாகவே ஜனாதிபதியும், அரசாங்கமும் உண்மைகளை கண்டறிவதற்கான இதயசுத்தியுடன் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றனர் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். – என்றார்.



## அரசியல் தலைவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் 117 ஆவது ஜனன தின நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கரு ஜயசூரிய மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கட்சி சார்பற்ற நபராக இந்த நிகழ்வில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நட்டத்தில் இயங்கும் பொது நிறுவனங்கள் தனியார் மயப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்தை ஜே.ஆர். ஜெயவர்தன முன்வைத்தார். அரச நிறுவனங்களும், தனியார் நிறுவனங்களும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற கருத்தையும் அவர் கொண்டிருந்தார். இதன் மூலம், நாட்டின் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதே அவரது நோக்கமாக இருந்தது. இந்தக் கூட்டு முயற்சிகளால்தான் இன்று சீனா பொருளாதார ரீதியாக வலுவாக உள்ளது.

ஜே.ஆர். ஜெயவர்தன ஒரு முடிவை எடுத்தால், அந்த முடிவை மாற்றமாட்டார். அதை மாற்றினால், அது மக்கள் நல ஆட்சியை உருவாக்க மட்டுமே செய்யப்பட்டது.

அவருடைய ஆட்சியின் போது அவருடன் ஒரு நல்ல இளைஞர் கூட்டம் இருந்தது. இளைஞர்களுக்கு வாய்ப்பையும் அதிகாரத்தையும் கொடுத்தார். தற்போதைய அரசியல் தலைவர்களுக்கு ஜே.ஆர். ஜெயவர்தன ஒரு சிறந்த முன்மாதிரி.” – என்றார்.

இந்நிகழ்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர் பந்துல குணவர்தன, சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவீன் திஸாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க, முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை மற்றும் ஆய்வுக் குழுவின் தலைவர் கருணாசேன கொடித்துவக்கு, ஜே.ஆர்.ஜெயவர்தனவின் பேரன்களான பிரதீப் ஜெயவர்தன, ஏ.ருக்சான் ஜெயவர்தன, அம்றிக் ஜயவர்தன, ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர்.ஏ.பி. தயாரத்ன, ஜே.ஆர். ஜெயவர்தன நிலைய நிர்வாக சபை உறுப்பினர் சிரேஷ்ட பேராசிரியர் யு. ஜி. புஸ்வேவல மற்றும் ஜே. ஆர். ஜெயவர்தன நிலைய உறுப்பினர்கள், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## திலீபன் ஊர்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தாக்குதல் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் எதற்காகப் பாதுகாப்பு இன்றி திலீபனின் ஊர்திப் பேரணியில் கலந்துகொண்டார் என்ற கேள்விக்கு அவர் பதில் அளிக்கும்போது –

“தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இலங்கை அரசால் வழங்கப்படும் பாதுகாப்பை ஏற்பதில்லை.

குறிப்பாக இலங்கை அரசின் எம்.எஸ்.டி., பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்பை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை ஏற்றுக்கொள்ளப்போவதும் இல்லை.

தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்பை மேற்கொண்ட இலங்கை பாதுகாப்புப் படையினரை எங்களின் பாதுகாப்புக்கு நாங்கள் பயன்படுத்த மாட்டோம்.

சிங்களக் காடையர்களின் தாக்குதலுக்கு இலக்கான வாகனத்தை பழுது பார்க்காமல் அவ்வாறே யாழ்ப்பாணம் வரையில் பொதுமக்களின் பார்வைக்காகக் கொண்டுச் செல்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தியாகி திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய இந்த வாகனம் பயன்படுத்த முடியாத அளவுக்குத் தாக்கப்பட்டுள்ளது.” – என்றார்.

## துப்பாக்கிச் சூட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இந்தச் சம்பவம் மருதானை, மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு அருகில் நேற்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான தந்தையும் மகளும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், 6 வயது மகள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதானை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தூதுவர் என்றதும் கண்களை அகல திறந்தபடி, யார், என்ன என்று விசாரிக்கத் தொடங்கி விட்டன.

வருகின்ற புதியவராவது இலங்கைத் தமிழர்களுக்காக அதிகம் சிரத்தை எடுத்து, குரல் கொடுத்து, நமக்காக புதுடிலியைச் சற்றுத் தூண்டி, ஏதும் செய்விக்க மாட்டாரா என்ற நப்பாசைதான். அதனால்தான் புதிய தூதுவர் குறித்து அதீத விசாரிப்புகள், தேடல்கள், விசாரணைகள்.

ஆனால் இலங்கைத் தமிழர் தரப்பு அப்படித் தேடுவதில் அர்த்தமில்லை.

ஏனெனில் ‘சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா?’

இந்தியத் தரப்பு இப்போது சந்தோஷ் ஜாவை இலங்கைக்கான அடுத்த தூதுவராக நியமிப்பது ஈழத் தமிழர் விவகாரத்தை நோக்கவல்ல. தனது பொருளாதார நலனை உறுதிப்படுத்துவதற்காக. அதுவே சந்தோஷ் ஜாவின் நியமனத்துக்கான முக்கிய இலக்கு என்று உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

சந்தோஷ் ஜா இலங்கைக்குப் புதியவர் அல்லர். இந்திய இராஜதந்திர சேவையில் மூத்த அதிகாரி அவர். 2007 – 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் – அதாவது யுத்தத்தின் இறுதிக் கட்டத்திலும் பின்னரும் – கொழும்பில் இந்தியத் தூதரகத்தில் பொருளாதாரக் கவுன்சிலராகக் கடமையாற்றியவர்.

அச்சமயத்தில் இலங்கையுடன் சீபா (CEPA) என்னும் பொருளாதார பங்காண்மை உடன்பாடு ஒன்றை செய்வதற்கு இந்தியா முயன்றது. அதற்கான தீவிர முயற்சிகளில் சந்தோஷ் ஜா இங்கு ஈடுபட்டிருந்தார். அத்தகைய உடன்பாடு இலங்கையில் இந்தியாவின் மேலாதிக்கத்தை ஓங்கச் செய்துவிடும் என பௌத்த – சிங்களப் பேரினவாத போக்குடைய இந்திய எதிர்ப்புச் சக்திகள் வெளியிட்ட ஆட்சேபம் மற்றும் அழுத்தத்தாலும் அத்தரப்புகளுக்கு அப்போதைய மஹிந்த அரசு முக்கிய இடம் அளித்ததாலும் அப்போது அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை.

சந்தோஷ் ஜா இப்போது ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இந்தியத் தூதுவர் பதவியில் இருந்து கொழும்புக்கான தூதுவராகமாறிஇங்குவருகின்றார்.ஐரோப்பிய ஒன்றியம் – இந்தியா இடையேயான சுதந்திர வர்த்த ஒப்பந்த பேச்சுக்களை வெற்றிகரமாக முன்னெடுக்கக் காரணமாக இருந்தவர் சந்தோஷ் ஜா என்று கூறப்படுகிறது.

இலங்கை – இந்திய புதிய இணைப்புகள் குறித்து டெல்லி கூடுதல் ஆர்வம், கவனம் செலுத்தியுள்ள நிலையில், இரு நாடுகளுக்கும் இடையிலான ஆற்றல், சக்தியை மையப்படுத்திய குழாய் இணைப்புகள் தொடர்பில் இலங்கையுடன் பேச்சுகளை இந்தியா முன்னெடுத்து வருகிறது.

மேலும், திருகோணமலையில் இந்தியா திட்டமிட்டுள்ள உத்தேச ஆற்றல் சக்தி மையம் தொடர்பான விடயங்களும் உள்ளன. அதே போன்று திருகோணமலை துறைமுகத்தை இந்திய – ஜப்பான் கூட்டுமுயற்சியில் அபிவிருத்தி செய்யவும் டெல்லி தீர்மானித்துள்ளது என்பதும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மேலும், திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் அபிவிருத்தி மற்றும் நகர அபிவிருத்தி திட்டங்கள் என பல்வேறு திட்டங்கள் குறித்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பொருளாதார ரீதியிலான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன. பொருளாதார ரீதியிலான இணைப்புகளை இருநாடுகளுக்கும் இடையில் வலுப்படுத்திக் கொள்வதில் கொழும்பும் டெல்லியும் ஆர்வமாக உள்ளன. ஆயினும் இந்தத் திட்டங்களை முன்னெடுப்பதில் மந்தகதியான செயற்பாடுகளே காணப்படுகின்றன.

இந்தப் பின்புலத்தில், இலங்கையுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் உள்ளிட்ட பல முக்கிய பொருளாதார திட்டங்களை முன்னெடுத்திருந்த மூத்த இராஜதந்திரி சந்தோஷ் ஜாவை, இலங்கைக்கான அடுத்த உயர்ஸ்தானிகராக டெல்லி நியமித்துள்ளது.

இந்த நியமனமானது இரு நாடுகளையும் பொருளாதார ரீதியில் வலுவாக இணைக்கும் இந்தியாவின் ஆர்வத்தை வெளிப்படுத்துவதாகவே உள்ளது.

இவற்றையெல்லாம் நோக்கும்போது ஒன்று தெளிவாகத் தெரிகின்றது..

அது – ‘சோழியன் குடுமி சும்மா ஆடுவதில்லை!’ என்பதுதான்...!

# ஜே.ஆரின் கொள்கைக்கேற்ப நடந்திருந்தால் இலங்கை இன்று அபிவிருத்தி அடைந்த நாடு

## ஜனன தின நிகழ்வு செய்தியில் ரணில் தெரிவிப்பு



**மறைந்த ஜெ.ஆர். ஜயவர்தன, 1977 ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்த சமூக பொருளாதார கொள்கைகளை அவ்வண்ணமே முன்னோக்கி கொண்டு சென்றிருந்தால் இலங்கை இன்று அபிவிருத்தி அடைந்த நாடாகியிருக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜெ.ஆர், ஜயவர்தனவின் 117 ஆவது ஜனன தின நிகழ்வையொட்டி விடுத்துள்ள விசேட செய்தியிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78ஆவது அமர்வில் பங்கேற்க அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ளநிலையிலேயே, ஜெ.ஆர்ஜயவர்தனவின் ஜன்ம தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி விசேட செய்தியை வெளியிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஜெ.ஆர், ஜயவர்தனவின் ஜனன தின நிகழ்வில் ஜனாதிபதியின் விசேட செய்தியை ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் பீ. மும்முல்லகே வாசித்தார்.

அதில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளதாவது:-

"ஜெ.ஆர். ஜயவர்தன இந்நாட்டில் சமூக பொருளாதாரத்தில் புரட்சியை ஏற்படுத்திய புரட்சியாளர். அவர் 1977ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்த சமூக பொருளாதார கொள்கைகளை அவ்வண்ணமே முன்னோக்கிக் கொண்டு சென்றிருந்தால் இலங்கை இன்று அபிவிருத்தி அடைந்த நாடாகியிருக்கும்.

நாட்டில், ஏற்பட்ட கலவரங்கள், யுத்தம் மற்றும் அவரது கொள்கை பற்றிய புரிதல் இன்மை காரணமாக, அவரது சமூக பொருளாதார கொள்கைகளின் பலன்களை முழுமையாக அடைய முடியாமல் போனது.

எமது வலயத்தின் இந்தியா , சீனா, வியட்நாம், உள்ளிட்ட நாடுகள் ஜெ. ஆர். ஜயவர்தனவின் கொள்கைகளையே பின்பற்றின. அந்த நாடுகள் காலத்திற்கு ஏற்றவாறு தமது கொள்கைகளை மாற்றிக்கொண்டு முன்னோக்கிச் சென்றன.

1938 களில் காங்கிரஸ் கட்சி உறுப்பினராக அரசியலுக்கு பிரவேசித்த அவர், 1946 களில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆரம்பித்தார். இலங்கையின் முதலாவது கெபினட் அமைச்சராக தெரிவானதோடு, டட்லி சேனநாயக்கவுக்கு பின்னர் 1973 களில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

1977 தேர்தலில் இலங்கையின் பிரதமரான ஜெ. ஆர். ஜயவர்தன அரசமைப்பு மாற்றத்தின் ஊடாக நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை உருவாக்கினார்.

அணிசேரா அமைப்பின் ஆறாவது பொதுச் செயலாளராக அவர் தனது நாட்டுக்காக ஆற்றிய சேவைகள் மகத்தானவை. அதனை நினைவுகூருவது பாராட்டப்பட வேண்டியது." - என்றார்.

# 'சனல்-4' இல் குற்றம் சுமத்தப்பட்ட படை அதிகாரிகள் தனித்துச் செயல்படக்கூடாது என ஜனாதிபதி உத்தரவு

உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்கள் குறித்து பிரித்தானியாவின் 'சனல் 4' தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படம் தொடர்பாக ஆராய்வதற்காக விசேட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை இவ்வாரத்தில் நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இவ்வாறானதொரு குற்றம் சுமத்தப்பட்ட பாதுகாப்பு பிரதானி மற்றும் அதிகாரிகள் தனித்து செயல்படக்கூடாது என்ற உத்தரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பு சபை கூட்டத்தில் விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பாதுகாப்பு சபை கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க உட்பட பாதுகாப்பு பிரதானிகள் கலந்துகொண்டிருந்தனர்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு உட்பட ஏனைய பாதுகாப்புத்துறை சார்ந்த விடயங்கள் குறித்து பரந்துபட்ட கலந்துரையாடல்களும் மீளாய்வுகளும் இதன்போது முன்னெடுக்கப்பட்டன.

அதனை தொடர்ந்து 2019ஆம் ஆண்டில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளினால் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலை தாக்குதல்கள் குறித்து பிரித்தானியாவின் செனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படத்தின் விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

செனல் 4 வெளிப்படுத்தல்களில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பாதுகாப்பு துறை சார்ந்த பிரதானி மற்றும் அதிகாரிகள் தனித்து செயற்படக் கூடாது.

இவ்வாறு செயற்படும் பட்சத்தில் அநாவசியமான நெருக்கடிகளும் தேசிய பாதுகாப்பு குறித்த சிக்கல்களுமே ஏற்படும். எனவே குற்றச்சாட்டுக்கு உட்பட அதிகாரிகள் தனித்து செயற்படக் கூடாது என்று இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டார்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான சனல் 4இன் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்காக விசேட குழு நியமிக்க கடந்த வார பாதுகாப்பு சபை கூட்டத்தின்போது தீர்மானிக்கப்பட்டது.

மறுபுறம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து செனல் 4 தொலைக்காட்சி வெளியிட்டுள்ள ஆவணப்படத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஆராய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு இவ்வாரம் நியமிக்கப்படவுள்ளது.

இவ்வாரத்துக்காக நாடாளுமன்ற அமர்வுகள் 19ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள நிலையில், உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்கள் மற்றும் சனல் 4 வெளிப்படுத்தல்கள் குறித்து விசேட விவாதங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவ்வாறானதொரு நிலையில் ஜனாதிபதியின் ஆலோசணைக்கு அமைவாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்கும் நடவடிக்கையினை ஆளும் கட்சியின் கொறடாவான பிரசன்ன ரணதுங்க முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மரக்கிளை தலையில் விழுந்ததில் 17 வயது மாணவி உயிரிழந்தார்

## தலவாக்கலை - தவலந்தன்ன வீதியில் சம்பவம்

தலவாக்கலை – தவலந்தன்ன வீதியில் புடலுஓயா, பலுவத்த பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து சென்ற பாடசாலை மாணவியின் தலையில் மரக்கிளை ஒன்று விழுந்ததில் அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்த மாணவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அகரபத்தனை பம்பரகலை தோட்டத்தில் வசித்து வந்த விஜயராஜ் திவ்யராணி (வயது 17) என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கண்டியில் உள்ள உறவினர் வீட்டில் இருந்து தனது தந்தையுடன் அகரபத்தனை பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்த போது இவ்வாறு விபத்துக்குள்ளாகி அவர் உயிரிழந்துள்ளார்.



# யாழ்.பல்கலைக்கழக மாணவி வீட்டில் இருந்து சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மாணவி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி – கோனாவில் பகுதியைச் சேர்ந்த வசந்தகுமார் டீலக்சியா என்ற மாணவியே வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மாணவியின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக நேற்று வைக்கப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பருத்தித்துறையில் வீடுடைத்து 10 பவுண் நகை, பணம் திருட்டு!

பருத்தித்துறையில் வீடொன்றை உடைத்து 10 பவுண் நகையும், 30 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளன.

ஐயனார்கலட்டிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டில் இருந்தோர், நேற்றுமுன்தினம் மதிய நேரம் அயலில் உள்ள வீடொன்றில் இடம்பெற்ற நிகழ்வுக்குச் சென்றுள்ளனர். நிகழ்வு முடிந்து தமது வீடு திரும்பியோர், வீட்டின் கதவு உடைக்கப்பட்டு இருப்பதை அவதானித்து, வீட்டினுள் சென்று பார்த்தபோது, வீட்டில் இருந்த, சங்கிலி, காப்பு உள்ளிட்ட 10 பவுண் நகைகளும், 30 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டு இருப்பதனை அவதானித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நோக்கம் அரசியல் மாய்மாலம்தான்!

'சனல்-4' காணொலி கிளப்பியிருக்கும் சர்ச்சைகளை விசாரிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அவரது அரசும் நியமிக்கும் இரண்டு விசாரணைக் குழுக்களும் அரசியல் உள்நோக்கம் கொண்டவை என்பது அம்பலமாகி வருகிறது.

அந்தக் காணொலியில் கூறப்பட்ட விடயங்களில் உண்மை ஏதும் உண்டா, அது குறித்துப் புலன் விசாரணை நடத்தப்பட வேண்டுமா என்பவை பற்றி ஆராய்ந்து, அறிக்கை தருவதற்காக ஒரு குழுவை ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்திருக்கின்றார். இது ஜனாதிபதி ஆணைக்குழுவோ அல்லது விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவோ அல்ல. ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறுவதற்காக அவர் அமைத்துள்ள ஒரு குழு. அவ்வளவே.

இந்தக் குழு சாட்சியமளிக்கும்படி யாரையும் அழைக்கும் சட்ட ரீதியான அதிகாரம் கொண்டதல்ல. ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அல்லது விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு அத்தகைய அதிகாரம் இருக்கும்.

இப்போது ஜனாதிபதி நியமித்துள்ள குழு சாட்சி ஒருவரை அழைத்தால் அந்தச் சாட்சி விரும்பினால் அந்த குழு முன்பாகத் தோன்றலாம். விரும்பாவிட்டால் பிரசன்னம் தராமல் விடலாம். அப்படி அந்தக் குழு சாட்சியமளிக்க ஒருவரை அழைத்தும், அவர் வராவிட்டால், அக்குழுவினால் ஒன்றும் செய்ய முடியாது.

அத்தகைய சட்ட அதிகாரம் அற்ற ஒரு குழுவினால், மேற்படி காணொலி தொடர்பான விடயத்தில் உண்மையைக் கண்டறியும் முயற்சியில் ஒரு சில அடிகள் கூட முன்னேற முடியும் என்று நம்புவதற்கு இடமில்லை.

அடுத்தது - நாடாளுமன்றத் தெரிவுக் குழு.

ஏற்கனவே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விடயம் குறித்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவும், ஜனாதிபதி ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டு, அவற்றின் அறிக்கைகளும் வெளிவந்திருக்கும் நிலையில், மீண்டும் ஒரு நாடாளுமன்றத் தெரிவு குழுவுக்கு வழி செய்யப்பட்டிருக்கின்றது. அதுவும் கூட அரசியல் உள்நோக்கத்தில்தான் என்று கூறப்படுகின்றது.

ஓய்வு பெற்ற சட்டமா அதிபர் தப்புல்ல டி லிவேரா ஓய்வு பெறுவதற்கு முன்னர் ஈஸ்டர் குண்டு தாக்குதல் விசாரணை குறித்து ஒரு குண்டைத் தூக்கிப் போட்டிருந்தார். இந்தத் தாக்குதலுக்குப் பின்னால் பெரும் சதிவலைத் திட்டம் ஒன்று இருந்ததாக அவர் அதிரடி அறிவிப்பு ஒன்றை அச்சமயம் வெளியிட்டிருந்தார். அது தொடர்பில் அவர் ஓய்வு பெற்ற பின்னர் அவரை விசாரித்து, அவரிடம் வாக்குமூலம் பெற பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் முயன்றனர். அதற்கு எதிராக தப்புல்ல டி லிவேரா உயர்நீதிமன்றத்திற்குச் சென்றார். சட்டமா அதிபர் என்ற முறையில் பதவியில் இருக்கும் போது தான் கூறிய கருத்துக்கு, ஓய்வு பெற்ற பின்னர் தம்மை விசாரிக்க முடியாது என்ற அவரின் கருத்து நிலைப்பாட்டை உயர் நீதிமன்றம் ஏற்றது. அதனால் அவருக்கு எதிரான விசாரணையை அப்போது முன்னெடுக்க முடியவில்லை.

நீதிமன்றத்திற்குக் கட்டுப்படாத நாடாளுமன்ற தெரிவுக் குழு முன்னிலையில் அவரை நிறுத்தி விசாரிக்கச் செய்யவும், அரசு அதிகாரிகள் தம்பாட்டில் சுயாதீனமாக இப்படிக் கருத்துத் தெரிவிக்கும் முயற்சிக்கு நிரந்தரமாக ஆப்படிக்கும் முன்னுதாரணமாக இதனைக் காட்டவும் என்றே தெரிவுக் குழு என்ற பொறியை விரித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் என்று கூறப்படுகின்றது.

ஆக, எல்லாம் அரசியல் மாய்மாலம்தான்...!

## ஓய்வுபெற்ற வைத்தியர்களை சேவையில் இணைக்க முடிவு

ஓய்வு பெற்ற வைத்தியர்களை ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மீண்டும் சேவையில் இணைந்து கொள்ள எதிர்பார்த்துள்ள விசேட வைத்தியர்கள் அடுத்த வாரம் முதல் உள்வாங்கப்படவுள்ளனர்.

சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார துறையில் நிலவும் வைத்தியர்கள் மற்றும் விசேட வைத்தியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நிறைவேற்று அதிகாரத்தாலேயே யுத்தத்துக்கு முடிவு கட்டப்பட்டதாம்

### ஜெ.ஆரின் மூத்த பேரன் பிரதீப் சொல்கின்றார்

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் காரணமாகவே வடக்கில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர முடிந்தது."

– இவ்வாறு மறைந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் மூத்த பேரனும் ஜெ.ஆர். ஜயவர்தன நிலைய நிர்வாக சபை உறுப்பினருமான பிரதீப் ஜயவர்தன தெரிவித்தார்.

ஜெ.ஆர் ஜயவர்தனவின் 117 ஆவது ஜனன தின நிகழ்வு கொழும்பில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே பிரதீப் ஜயவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று நாட்டில் நிலவும் பல பிரச்சினைகளுக்கு தற்போதைய அரசால் தீர்வுகளை வழங்க முடிந்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் துணிச்சலான தீர்மானங்களை நாம் பாராட்டுகின்றோம்.

நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேலைத்திட்டத்துக்கு நாம் பூரண ஆதரவளிக்கின்றோம். எனவே, நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்." – என்றார்.

## தாக்குதல் நடத்தியவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு அரசிடம் வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன்.

திருகோணமலையில் நேற்று தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி மீது தாக்குதல் மேற்கொண்ட சிங்களக் காடையர் கும்பல், அந்த ஊர்தியில் பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதும் கற்கள், கொட்டன்கள் மற்றும் ஹெல்மட் கொண்டு கொடூரமான தாக்குதலை நடத்தியுள்ளது. இந்தச் சம்பவத்தைக் கண்டித்து கருத்து வெளியிடும்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது பொலிஸார் முன்னிலையில் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்தத் தாக்குதல் நடத்தியவர்களை இலகுவில் அடையாளம் காணும் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்கள் மூலம் உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன்பாக நிறுத்துமாறும் வலியுறுத்துகின்றோம்." – என்றார்.

## தென்மராட்சி விபத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டபோது நேற்று அதிகாலை அவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன் விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# இப்போதாவது இனவாத இலங்கை அரசை கண்டிப்பதற்கு வாய் திறக்குமா இந்தியா?

## திருமலை காடைத்தனத்துக்குச் சீமான் கடும் கண்டனம்



“ஈழ விடுதலையின் ஆயுதப் போராட்டத்தின் அறத்தையும், அவசியத்தையும் தனது அஹிம்சை போராட்டத்தின் மூலம் உலகுக்கு உணர்த்திய விடுதலைப் போராளி திலீபனின் ஈகத்தைக்கூட நினைவுகூரக் கூடாது என்று விடுதலைப் போர் மௌனிக்கப்பட்ட 14 ஆண்டுகளுக்குப் பிறகும் சிங்களக் காடையர்களை ஏவி இலங்கை அரசு திலீபன் நினைவேந்தலைத் தடுத்து நிறுத்துமாயின் தமிழர்கள் மீதான சிங்கள இனவெறி மனப்பான்மை என்றைக்கும் மாறாது என்பதற்கு இக்கொடும் நிகழ்வு மற்றுமொரு சான்றாகும்.”

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

திருகோணமலையில் நேற்று தியாக தீபம் திலீபனை நினைவுகூரும் வகையில் தமிழ் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி மீது சிங்களக் காடையர்களால் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

“இலங்கை இனவாத அரசின் இராணுவ முகாம் எதிரில் சிங்களப் பொலிஸார் முன்னிலையிலேயே தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல், ஜனநாயக முறையில் தமிழர்கள் ஒருபோதும் உரிமையைப் பெற்றுவிட முடியாது என்பதையே மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றது.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் அற்ப அரசமைப்பு திருத்தங்கள் மூலம் அனைத்து உரிமைகளையும் தமிழர்கள் பெற்று வாழ்ந்திட முடியும் என்ற வரலாற்றுப் பொய்யை சர்வதேச அரங்கில் மீண்டும் மீண்டும் முன்வைக்கும் இந்திய ஒன்றிய அரசு இப்போதாவது இனவாத இலங்கை அரசைக் கண்டிக்க வாய் திறக்குமா?

தமிழ் மக்களின் ஜனநாயக பிரதிநிகளின் மீதான வன்முறை தாக்குதல் தொடர்ச்சியாக நடைபெறும் நிலையில் இந்திய ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசு அதனை அமைதியாக வேடிக்கை பார்ப்பது ஏன்?

தமிழ் நாட்டை ஆளும் தி.மு.க. அரசு வழக்கம்போல் கடந்து செல்லாமல் உடனடியாக, ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனவாத அடக்குமுறைகளைத் தடுத்து நிறுத்த இந்திய ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றுள்ளது.

# விசாரணையும், தீர்வும் உள்நாட்டுக்குள் சரிவராது என்பதை நிரூபிக்கும் செயல்

## காணாமல் ஆக்கபட்டோர் உறவினர்களின் சங்கம் அறிக்கை

தியாக தீபம் திலீபன் நினைவு ஊர்தி மீதான இனவெறி தாக்குதலை கண்டிப்பதாக வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கபட்டோர் உறவினர்களின் சங்கம் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டு உள்ளவை வருமாறு:–

பொத்துவிலில் இருந்து நல்லூர் நோக்கி சென்றுகொண்டிருந்த தியாக தீபம் திலீபன் அவர்களது உருவம் தாங்கிய ஊர்தி மீது இன்று மாலை, திருகோணமலை, கப்பல்துறையில் வைத்து இராணுவ புலனாய்வாளர்கள் மற்றும் காவல்துறையினர் சூழ்ந்திருக்க இனவெறி கொண்ட காடையர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தியாகி திலீபன் தமிழ் மக்களின் உரிமைக்காய் காந்தியை விஞ்சிய வகையில் அகிம்சை வழியில் போராடிய போராளியாவார். அவரின் தியாகங்கள் என்றென்றும் அனைவராலும் மதிக்கப்படுவதுடன், சர்வதேசத்தினால் அவரது தியாகம் வியந்து பார்க்கப் படுகின்றது.

ஈழத்தமிழர் எதிர்கொள்ளும் சவால்களை உலகறியச் செய்த பார்த்தீபனின் தியாகத்தினை கண்டு சிங்கள பௌத்த தேரர் ஒருவர் கடந்த வருடம் கவிதை இயற்றியிருந்தமை யாவரும் அறிந்ததே.

இவ்வாறான பெருமை மிக்க பெருந்தகையின் திருவுருவப்படத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட திட்டமிடப்பட்ட இனவெறித்தாக்குதல் கண்டிக்கத்தக்கது என்பதுடன் எமது நினைவேந்தல் உரிமை எமக்கு மறுக்கப்பட்டுள்ளதை சர்வதேசத்திற்கு இது வெளிப்படுத்தி நிற்கின்றது.

மேலும் இவ்வூர்தியில் சென்று கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் செ. கஜேந்திரன் மற்றும் அவருடன் பயனித்தவர்கள் மீதான தாக்குதல்கள் இலங்கையில் சிறப்புரிமை கொண்ட, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே பாதுகாப்பு இல்லை என்பதனை வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாறான சூழலில் உள்நாட்டுக்குள் விசாரணை, தீர்வு என்பவை சாத்தியமற்றவை என்று நாம் தொடர்ந்து கூறிவருவதன் காரணங்களை சர்வதேசத்துக்கு இச்சம்பவமும் வெளிப்படுத்தியுள்ளது. – என்று கூறப்பட்டுள்ளது.

# சூத்திரதாரிகளைத் தண்டிக்கக் கோருகிறது கிழக்குப் பல்கலை தமிழ் மாணவர் ஒன்றியம்

திருகோணமலையில் தியாகதீபம் திலீபன் ஊர்திப் பவனிமீது சிங்கள காடையர் குழு மேற்கொண்ட திட்டமிட்ட மிலேச்சத்தனமான தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறோம் என கிழக்குப் பல்கலைக்கழக தமிழ் மாணவர் ஒன்றியமும் தெரிவித்துள்ளது

இதுதொடர்பில் கிழக்குப் பல்கலைக் கழக தமிழ் மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், சாதரண எங்கள் நினைவேந்தலைக்கூட செய்ய முடியாத இந்த துர்ப்பாக்கிய நிலைக்கு அரசாங்கம் பொறுப்பு கூறவேண்டும். இந்தத் திட்டமிட்ட தாக்குதலை செய்ய தூண்டியவர்களுக்கும் தாக்குதலை நடத்திய காடையர்களுக்கும் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சிங்கள இனவெறியர்கள் தாக்குதலை நடத்தி தமிழர்களை ஒருபோதும் அச்சுறுத்த முடியாது!

## கஜேந்திரன் எம்.பி. மீதான வெறியாட்டத்துக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கடும் கண்டனம்



நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது சிங்கள இனவெறியர்கள் நடத்தியுள்ள கொடூரத் தாக்குதலைக் கண்டிக்கின்றோம் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தெரிவித்துள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச்செயலாளரான வன்னி அரசுவினால் இந்தக் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"நாடாளுமன்ற உறுப்பினருக்கே பாதுகாப்பற்ற நாடாக இலங்கை தொடர்கின்றது. இந்தியாவில் இந்துத்துவ மதவெறியர்கள் எப்படி பொலிஸார் இருக்கும் போதே சிறுபான்மை மக்கள் மீது தாக்குதல் நடத்துவார்களோ அப்படி கொடூரத் தாக்குதலை நடத்தியுள்ளது சிங்கள இனவெறிக் கும்பல்.

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டின் நினைவையொட்டி எழுச்சி ஊர்தி பயணத்துக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு பகுதிகளில் தியாக தீபம் திலீபன் நினைவைப் போற்றும் வகையில் இம்மாதிரியான ஊர்திப் பயணத்தை ஒருங்கிணைப்பது வழக்கம்.

முறையான முன் அனுமதியோடு தான் நடத்தப்படுகின்றது. ஆனாலும், சிங்கள இனவெறியர்கள் இத்தாக்குதலை தொடுத்திருப்பது கண்டனத்துக்குரியதாகும். இப்படி தாக்குதலை நடத்தி தமிழீழ உறவுகளை அச்சுறுத்த முடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர் மீதான இத்தாக்குதலை விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இன்னமும் தொடரும் இனவெறிப்போக்குக்கு எந்தத் தீர்வும் காணாமல், சிங்கள இனவெறி அரசுக்கு ஒத்துழைக்கும் இந்திய அரசின் போக்கும் சிங்கள பௌத்த இனவாதிகளுக்குத் துணைபோவதாகவே அமைந்துள்ளது.

தொடரும் இத்தகைய இனவெறித் தாக்குதலை தடுத்து நிறுத்தும் பொறுப்பு சர்வதேசத்துக்கும் உண்டு. ஆகவே, இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு தீர்வு காண இந்தியாவும் தலையிட வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.

# இனவாதத்தின் உக்கிரத்தை வெளிப்படுத்தி நிற்கும் சிங்களக் காடையரின் மிலேச்சத்தனமான தாக்குதல்

## சிறீதரன் எம்.பி. கடும் கண்டனம்

தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படம் தாங்கிய நினைவேந்தல் ஊர்திமீது, திருகோணமலை கப்பற்துறையருகே சிங்களக் காடையர்கள் மேற்கொண்டுள்ள மிலேச்சத்தனமான தாக்குதல், இந்தநாட்டில் இனவாதத்தீ நீறுபூத்தநெருப்பாகவே இன்னமும்கனன்றெறிகிறது என்பதை இன்னுமொரு முறை நிரூபணம் செய்திருக்கிறது என யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பில் நேற்று தாம் விடுத்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:–

இருநாட்டு அரசுகளின் கவனத்தையும், ஈழத்தமிழர்களுக்கான அடிப்படை நியாயத்தையும் கோரி 36 ஆண்டுகளின் முன்னர் அகிம்சைப் போராட்டம் நடத்திய, திலீபன் என்கிற தியாகியின் உருவப்படத்துக்கும், அதைத் தாங்கிய ஊர்திக்கும், அவ்வூர்தியோடு இணைந்து பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்கும் இந்த நிலை என்றால், எந்தவித நியாயப்பாடுகளுமற்று இத்தனை ஆவேசமாய் இனவாதத்தைக் கக்கும் சிங்களவர்களோடு, இந்த நாட்டில் தமிழர்கள் இணைந்து வாழ்வது எத்தனை தூரம் சாத்தியமானது என்பது பற்றி, இனிமேலேனும் சர்வதேச சமூகம் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

ஜெனீவா அமர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சமநேரத்தில், தமிழர்களையும், அவர்களது போரியல் நியாயத்தையும், இனத்துக்காக நிகழ்த்தப்பட்ட தியாகத்தையும் காலில் போட்டு மிதித்து, தங்களது அடக்குமுறை மனோபாவத்தை சிங்கக்கொடிகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ள சிங்களக் காடையர்களது செயல் கடும் கண்டனத்துக்குரியது. தமிழர்களது உணர்வு நிலைகள் குறித்தும், அவர்களது சுயாதீன உரித்துகள் குறித்தும் எப்போதும் கள்ளமௌனம் காக்கும் ஆட்சி அதிகாரபீடங்கள், இவ்விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என நாம் துளியும் எதிர்பார்க்கவில்லை.

இருந்தபோதும், ஒரு சுதேசிய இனத்தின் அடிப்படை உணர்வுநிலைகளை




வலிந்து சீண்டி, இரு இனங்களுக்கிடையிலான முரண்நிலைகளை மீண்டும் மீண்டும் கொதிநிலைக்குத் தள்ளி அரசியல் லாபம் ஈட்டும் சக்திகள் இனங்காணப்பட வேண்டும். ஈழத் தமிழர்களது தன்னாட்சிக் கோரிக்கை நியாயபூர்வமானது என்ற செய்தியை சர்வதேச சமூகத்தின் செவிகளில் அறைகூவல் செய்வதற்கு இந்தச் சம்பவம் ஓர் சாட்சியமாய் அமைந்திருக்கிறது. இதன் விளைவென்பது, எமது மக்களிடத்தே இனம் குறித்த ஓர்மத்தை தணியாது தகிக்கச் செய்துகொண்டே இருக்கும் என்பதை சிங்களவர்களும் உணரும் காலமொன்று உருவாகியே தீரும். – என்று உள்ளது.

# யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் கண்டனம்




திருகோணமலையில் தியாகதீபம் திலீபன் அண்ணாவை நினைவேந்தி அவரது உருவப்படத்தைத் தாங்கி வந்த ஊர்திப் பவனி மீது சிங்கள அடிப்படை வாதக்குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை மாணவர் சமூகமான நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஒன்றியத்தின் தலைவர் அழகராசா விஜயகுமார் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:–

திலீபன் அண்ணாவின் உருவப் படத்தை தாங்கி வந்த ஊர்தியானது தமிழர் தலைநகரிலேயே தாக்கப்பட்ட இந்தச் சம்பவமானது வடகிழக்கு மாகாணங்களில் இன்னமும் தமிழ் மக்களுக்கு அவர்களது குறைந்த பட்ச நினைவுகூரும் உரிமை கூட மறுக்கப்பட்டு வருகின்றது என்பதற்கு சாட்சியமாகும்.

அகிம்சையைப் பற்றிப் போதித்து அகிம்சாவாதிகளிற்கும் சனநாயகவாதிகளிற்கும் முன்னுதாரணமாக விளங்கும் தியாக தீபம் திலீபன் அண்ணாவின் இந்த நினைவேந்தலை தாக்கும் சிங்கள அடிப்படைவாதக் கும்பல்களைப் பார்த்தாவது உலகச் சமூகமும் நம் மக்களும் நமது இந்த நிலை பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். – என்று உள்ளது.

# தமிழர்கள் மீதான சிங்களவர்களினுடைய வன்மத்தை எடுத்துக் காட்டும் தாக்குதல்!

## வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விசனம்




தியாகதீபம் திலீபனின் உருவப்படத்தை தாங்கி வந்த ஊர்திப் பவனி மீது திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், மீள இனப் பிரச்சினையை தீவிரப்படுத்தி இன்னமும் தமிழர்கள் மீதான சிங்களவர்களினுடைய வன்மத்தை இது எடுத்துக்காட்டுகின்றது என்று குறிப்பிட்டுள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இரவு இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வடக்கு, கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஊடக பேச்சாளர் இ.தர்ஷன் இக்கண்டனத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

எங்களுடைய கடந்த காலங்களை அடுத்த சந்ததிக்கு எடுத்துக் கூறுகின்ற செயல் இன்று ஈழ தேசத்தில் நிகழ்ந்திருக்கின்றது. குறிப்பாக தியாக தீபம் திலீபன் அண்ணாவின் நினைவேந்தல் காலப்பகுதியிலே நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உட்பட்டோர் நினைவேந்தலை அடுத்த சந்ததிக்கு கடத்தும் முகமாக இன்றைய தினம் திருகோணமலை கப்பல் துறை வழியினூடாக பயணித்துக் கொண்டிருந்த தருணத்தில் பெண்கள் உட்பட இராணுவப் புலனாய்வாளர்கள் அந்த ஊர்தியைத் தாக்கியுள்ளார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதற்கு வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இன நல்லிணக்கம் தொடர்பாக பேசிக் கொள்கின்ற அரசாங்கத்தின் இராணுவம், பொலிஸ் தரப்புகள் உண்மையிலேயே நீதி நியாயத்துடன் செயற்பட வேண்டும்.

இன்று இடம்பெற்ற செயற்பாடுகள் அனைத்தும் திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதும் அங்கு பதற்றமான சூழ்நிலை நிலவுவதாக கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக தடுத்து நிறுத்தப்படவேண்டும். தமிழர் தாயகம் எங்கும் தியாக தீபம் திலீபன் அண்ணாவினது நினைவேந்தலில் அவரது கோரிக்கையை முன்வைத்து அடுத்த சந்ததிக்கு எடுத்து செல்கின்ற தருணத்தில் இவ்வாறான செயற்பாடு நிகழ்ந்திருக்கின்றமை மீள இனப் பிரச்சினையை ஏற்படுத்தி தமிழர்கள் மீதான சிங்களவர்களினுடைய வன்மத்தை எடுத்துக்காட்டுகின்றது.இதனை வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கண்டிக்கிறது – என்றார்.

இதன் போது வடக்கு கிழக்கு பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் சி.ஜெல்சின், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் யோ. நெவில்குமார் உள்ளிட்டவர்களும் உடனிருந்தனர்.

# நல்லிணக்கம் ஒருபோதும் சாத்தியமேயில்லை அதை எடுத்துக் காட்டுகின்ற தாக்குதலே இது

## முன்னாள் மேயர் மணிவண்ணன் கண்டனம்



தியாக தீபம் திலீபனின் உருவப் படத்தைத் தாங்கிய வாகன ஊர்தியை பொலிஸார் வேடிக்கை பார்க்க சிங்கள காடையர்கள் தாக்கி சேதப்படுத்தியமையும் அவ் வாகன அணியோடு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்டவர்கள் தாக்கப்பட்டமையும் ஏற்றுக்கொள்ள முடியாத காட்டுமிராண்டித்தனம், இந்த ஈன செயலை வன்மையாக கண்டிக்கின்றேன் – என யாழ் மாநகர முன்னாள்

முதல்வரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

தியாகதீபம் திலீபனின் உருவப் படத்தை தாங்கி வந்த ஊர்திப் பவனி மீது திருகோணமலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு கண்டணம் தெரிவித்து ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உண்ணா நோன்பிருந்து, அகிம்சை போர் தொடுத்து, ஈகச்சாவடைந்த உத்தமனை நினைவு கூரக் கூட இந்த மண்ணில் அனுமதி இல்லை என்பதை இது காட்டி நிற்கின்றது. இச்செயல் இந்த நாட்டில் ஒருபோதும் நல்லிணக்கம் சாத்தியம் இல்லை என்பதையும் தமிழ் மக்கள் இந்த மண்ணில் நிம்மதியாக வாழ அனுமதிக்கப்படப் போவதில்லை என்பதையும் பட்டவர்த்தனமாக காட்டுகின்றது. இதனை சர்வதேசம் கண்டும் காணாதிருப்பதுதான் வேதனையானது – என்று அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிங்கள இனவெறியர்கள் தாக்குதலை நடத்தி தமிழர்களை ஒருபோதும் அச்சுறுத்த முடியாது!

## கஜேந்திரன் எம்.பி. மீதான வெறியாட்டத்துக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி கடும் கண்டனம்



நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீது சிங்கள இனவெறியர்கள் நடத்தியுள்ள கொடூரத் தாக்குதலைக் கண்டிக்கின்றோம் என விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தெரிவித்துள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வன்னி அரசு துணைப் பொதுச்செயலாளரால் இந்தக் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

”நாடாளுமன்ற உறுப்பினருக்கே பாதுகாப்பற்ற நாடாக இலங்கை தொடர்கின்றது. இந்தியாவில் இந்துத்துவ மதவெறியர்கள் எப்படி பொலிஸார் இருக்கும் போதே சிறுபான்மை மக்கள் மீது தாக்குதல் நடத்துவார்களோ அப்படி கொடூரத் தாக்குதலை நடத்தியுள்ளது சிங்கள இனவெறிக் கும்பல்.

தியாக தீபம் திலீபனின் 36 ஆம் ஆண்டின் நினைவையொட்டி எழுச்சி ஊர்தி பயணத்துக்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு பகுதிகளில் தியாக தீபம் திலீபன் நினைவைப் போற்றும் வகையில் இம்மாதிரியான ஊர்திப் பயணத்தை ஒருங்கிணைப்பது வழக்கம்.

முறையான முன் அனுமதியோடு தான் நடத்தப்படுகின்றது. ஆனாலும், சிங்கள இனவெறியர்கள் இத்தாக்குதலை தொடுத்திருப்பது கண்டனத்துக்குரியதாகும். இப்படி தாக்குதலை நடத்தி தமிழீழ உறவுகளை அச்சுறுத்த முடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர் மீதான இத்தாக்குதலை விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இன்னமும் தொடரும் இனவெறிப்போக்குக்கு எந்தத் தீர்வும் காணாமல், சிங்கள இனவெறி அரசுக்கு ஒத்துழைக்கும் இந்திய அரசின் போக்கும் சிங்கள பௌத்த இனவாதிகளுக்குத் துணைபோவதாகவே அமைந்துள்ளது.

தொடரும் இத்தகைய இனவெறித் தாக்குதலை தடுத்து நிறுத்தும் பொறுப்பு சர்வதேசத்துக்கும் உண்டு. ஆகவே, இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு தீர்வு காண இந்தியாவும் தலையிட வேண்டுமென விடுதலைச் சிறுத்தைகளின் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றுள்ளது.

# இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 79.70 கோடி ரூபா செலவில் 1,591 வீடுகள்

## - முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்



13 மாவட்டங்களில் உள்ள 19 இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் 79 கோடியே 70 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆயிரத்து 591 வீடுகளை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

வேலூர் மாவட்டம், மேல்மொணவூர், இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் நேற்று நடைபெற்ற விழாவின்போதே இந்த வீடுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்துள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தமிழகத்தில் உள்ள 29 மாவட்டங்களில் 104 தற்காலிக முகாம்கள் ஏற்படுத்தப்பட்டு 19 ஆயிரத்து 498 குடும்பங்களைச் சார்ந்த 58 ஆயிரத்து 272 பேர் தங்கவைக்கப்பட்டு வசித்து வருகிறார்கள்.

தமிழக முதல்வர் 2021-2022 ஆம் ஆண்டுகள் சட்டமன்ற கூட்டத் தொடரின்போது பேரவையில் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு இனி பாதுகாப்பான, கவுரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்து தருவதை இந்த அரசு உறுதி செய்யும் என்று அறிவித்திருந்தார். இலங்கை அகதிகள் முகாம் என்பதை இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்றும் பெயர் மாற்றம் செய்தும் அறிவித்தார்.

முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்பட்டுவரும் மாதாந்த பணக் கொடுப்பனவுகள், உடைகள், பாத்திரங்கள், கல்வி உதவித் தொகை ஆகிய நலத்திட்டங்களை உயர்த்தப்பட்ட விகிதத்தில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இலவச சமையல் எரிவாயு இணைப்பு, அடுப்பு மற்றும் சமையல் எரிவாயு மானியம், மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும் எனவும் அறிவித்தார். இத்திட்டங்கள் அனைத்தும் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், தமிழக முதல்வர் இலங்கைத் தமிழர்களது முகாம்களில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7 ஆயிரத்து 469 வீடுகள் புதிதாக கட்டித்தரப்படும் எனவும் அறிவித்திருந்தார். அவற்றில் முதற்கட்டமாக, 3510 வீடுகள் புதிதாக கட்டித்தரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டு, அதற்காக 176.02 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக 20 மாவட்டங்களில் உள்ள 35 இலங்கைத் தமிழர் முகாம்களில் 3,510 புதிய வீடுகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் கட்டப்பட்டு வருகிறது. அவற்றில், தற்போது 13 மாவட்டங்களில் உள்ள 19 முகாம்களில் 79.70 கோடி ரூபா செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ள. 1,591 வீடுகளை தமிழக முதல்வர் வேலூர் மாவட்டத்தில் நேரடியாகவும், இதர 12 மாவட்டங்களில் காணொளிக் காட்சி வாயிலாகவும் திறந்து வைத்தார்.

மேலும், மேல்மொணவூர், இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம் இல்லவாசிகளுக்கு புதிய குடியிருப்புகளை வழங்கிடும் அடையாளமாக 5 குடும்பத்தினருக்கு குடியிருப்புக்கான திறப்புகளையும், 8 வகையான வீட்டு உபயோக பொருட்களையும், மரக்கன்றுகளையும், மாணவர்களுக்கு கல்வி உபகரணங்களையும் வழங்கினார்.

இலங்கைத் தமிழர் முகாம்களில் குடிநீர், மின்சாரம், கழிப்பிடம் மற்றும் சாலை வசதிகள் புதிதாகவும் ஏற்கனவே உள்ளவற்றை உடனுக்குடன் சீர்படுத்தியும் தரப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்திருந்தார்.

அதன்படி, மேற்படி 13 மாவட்டங்களில் உள்ள 19 முகாம்களில் 11.33 கோடி ரூபா செலவில் ஏனைய அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு, முகாம்வாழ் இலங்கைத் தமிழர்கள் மதிப்புடன், மேம்படுத்தப்பட்ட, பாதுகாப்பான வாழ்க்கை வாழ்வதை அரசு மீண்டும் உறுதி செய்துள்ளது.

அத்துடன், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக ஏனைய மாவட்டங்களில் உள்ள முகாம்வாழ் தமிழர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது பயனாளிகளிடம் பிள்ளைகளின் படிப்பு குறித்தும், தற்போது கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளின் வசதிகள் மற்றும் அடிப்படை தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## 40 தொகுதிகளில் வெற்றி பெறுவோம்: ஸ்டாலின் நம்பிக்கை

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் என்று வேலூரில் நடைபெற்ற விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் உறுதிபட தெரிவித்துள்ளார்.

வேலூரில் நடைபெற்ற தி.மு.கவின் முப்பெரும் விழாவில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நமது கூட்டணிதான் புதுவை உள்ளிட்ட 40 தொகுதிகளிலும் நாம்தான் வெற்றி பெறப்போகிறோம். அதில் எந்த மாற்றமும் இல்லை. அதில் சந்தேகமே இல்லை. தமிழ்நாட்டில் மட்டும் நாம் வெற்றி பெற்றால் போதாது. இந்தியா முழுமைக்கும் வெற்றி பெற்றாக வேண்டும்.

அதனால்தான் இண்டியா கூட்டணியை உருவாக்கி இருக்கிறோம்.

நம்முடைய ஆட்சி ஒன்றியத்தில் அமைந்தால் 15 மாதத்தில் மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனையைக் கட்டி எழுப்ப முடியுமா? முடியாதா? நீட் தேர்வில் இருந்து விலக்கு பெற முடியுமா? முடியாதா? தமிழ்நாட்டுக்குத் தேவையான ரயில்வே திட்டங்களை ஏராளமாகக் கொண்டு வர நம்மால் முடியும். புதிய விமான நிலையங்கள் மெட்ரோ ரயில்களை இயக்க முடியும்.

இவை எல்லாமே நம்முடைய இண்டியா கூட்டணி ஆட்சி அமையுமானால் தமிழ்நாட்டுக்கு கொண்டு வர முடியும். இந்தியா முழுமைக்கும் சமூகநீதியை உருவாக்கித் தர நம்மால் முடியும் என்று தெரிவித்துள்ளார்.

# பிரேசிலில் விமான விபத்து: விமானி உட்பட 14 பேர் பலி!





பிரேசிலின் அமேசான் மாநிலத்தில் இடம்பெற்ற விமான விபத்தில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமேசான் மாநில தலைநகரான மனாஸிலிருந்து 400 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள பார்சிலோஸ் மாகாணத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் விமானத்தில் பயணித்த 12 பயணிகளும், விமானி ஒருவரும், துணை விமானி ஒருவரும் உயிரிழந்துள்ளனர் என அமேசான் மாநிலத்தின் ஆளுநர் வில்சன் லிமா குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் மனாஸ் ஏரோ டெக்ஸி ஏர்லைன்ஸ் இந்த விபத்து இடம்பெற்றதை உறுதிப்படுத்தி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர்களில் அமெரிக்க பிரஜைகளும் உள்ளடங்குகின்றனர் என பிரேசிலிய ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

இதேவேளை விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பிரேசில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ரஷ்ய ஏவுகணை தாக்குதலை தடுக்க உக்ரைனுக்கு உதவுகிறது கனடா!



ரஷ்ய ஏவுகணை மற்றும் வான் வழித் தாக்குதல்களைத் தடுக்கும் நோக்கில் உக்ரைனுக்கு பாதுகாப்பு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக கனடா 33 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

இதுவரை உக்ரைனுக்கு 1.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை இராணுவ உதவியாக கனடா வழங்கியுள்ளது.

இதேவேளை, உக்ரைனின் கார்கிவ் பகுதியில் வாகன பழுதுபார்க்கும் ஆலை மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதலை முன்னெடுத்துள்ளது.

குறித்த பகுதியில் 300 இற்கும் மேற்பட்ட ஏவுகணை தாக்குதல்களை ரஷ்யா மேற்கொண்டுள்ளது என அந்த நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கார்கிவ் பகுதியில் தற்போது 20 சதவீதத்திற்கும் அதிகமான பகுதி ரஷ்ய தாக்குதலினால் அழிக்கப்பட்டுள்ளது என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# கொவிட் 19 தோற்றம் தொடர்பில் ஆய்வு நடவடிக்கை

கொவிட் 19 வைரஸின் தோற்றம் தொடர்பில் ஆய்வு செய்ய நிபுணர்கள் குழுவொன்றை சீனாவுக்கு அனுப்பத் தயாராக உள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

முழுமையான ஆய்வுகளை முன்னெடுக்க பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு சீனாவிடம் கோரப்பட்டுள்ளது.

கொவிட் – 19 வைரஸின் தோற்றத்தை சர்வதேச சமூகத்தால் உறுதியாகக் கண்டறிய முடியவில்லை. முதல் திரிபுகள் மற்றும் தொற்றாளர்கள் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் சீனாவின் வுஹானில் அடையாளம் காணப்பட்டனர்.

இந்தநிலையில் கடந்த 2021 ஆம் ஆண்டு உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர்கள் குழு ஆய்வுகளை முன்னெடுத்திருந்தது.




# ஆசியாவின் சம்பியன்!

## கொழும்பில் வைத்து இலங்கையைச் சாய்த்து 8ஆவது தடவையாக சாதித்துக் காட்டியது இந்தியா

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நேற்று மாலை நடைபெறவுள்ள ஆசியக் கிண்ண இறுதியாட்டத்தில் இலங்கை – இந்திய அணிகள் மோதின.

ஆசியக் கிண்ண 50 ஓவர்கள் கிரிக்கெட் தொடர் கடந்த ஆகஸ்ட் 30ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றது.

இத்தொடர், ஆரம்ப காலத்தில் 50 ஓவர்கள் கொண்ட போட்டியாகவே நடைபெற்று வந்தது. ஆனால், கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இதில் இருபது-20 போட்டிகளும் நடத்தப்படுகின்றன. அதன்படி ஒவ்வொரு ஆண்டும் மாறி மாறி இரு வகைப் போட்டிகளும் நடைபெற்று வருகின்றன.

இம்முறை 50 ஓவர்கள் போட்டிகள் நடைபெற்று வரும் நிலையில், இத்தொடரின் இறுதியாட்டம் நேற்று கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது.

நேற்று பி.பகல் 3 மணியளவில் ஆரம்பிக்கவேண்டிய போட்டி, மழை காரணமாக சிறிது நேரம் தாமதமாகவே தொடங்கியது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, இந்தியப் பந்துவீச்சுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது.

இலங்கையின் முதல் 6 விக்கெட்டுகளும் வெறும் 5.4 ஓவர்களில் 12 ஓட்டங்களுள் வீழ்த்தப்பட்டது.

பின்னர் தொடர்ந்து சிறிது நிதானமாக இலங்கை ஆடியபோதும், அடுத்தடுத்து விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது. இறுதியில் 15.2 ஓவர்களில் 50 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து பரிதாப நிலையை எட்டியது.

இதன்மூலம் இந்திய அணிக்கு 51 ஓட்டங்கள் என்ற இலகு வெற்றியிலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இலங்கை சார்பாக துடுப்பாட்டத்தில் குசல் மெண்டிஸ் (17), துஷான் ஹமந்த (13ஆட்டமிழக்காமல்) ஆகியோரே இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையை எட்டியவர்கள் ஆவர்.




இந்தியப் பந்துவீச்சில், மொஹமட் சிராஜ் 6 விக்கெட்டுகளையும், ஹார்த்திக் பாண்டியா 3 விக்கெட்டுகளையும் பூம்ரா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பின்னர் 51 ஓட்டங்கள் என்ற இலகுவாக வெற்றியிலக்கை நோக்கிக் களமிறங்கிய இந்திய அணி, இஷாந்த் கிஷான் (23), சுப்மன் ஹில் (27) ஆகியோரின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க 6.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 51 ஓட்டங்களைச் சேர்த்து, 10 விக்கெட்டுகளால் வெற்றியைத் தனதாக்கியது.

இதன்மூலம் 2023ஆம் ஆண்டுக்கான ஆசிய சம்பினாகவும் தெரிவாகியுள்ளது.

இந்த ஆட்டத்தின் நாயகனாக இந்தியாவின் மொஹமட் சிராஜ் தெரிவானார். தொடரின் நாயகனாக அதே அணியைச் சேர்ந்த குலதீப் யாதவ் தெரிவானார்.

ஏற்கனவே, நடைபெற்ற ஆசியக் கிண்ணத் தொடர்களில் இந்திய அணி 7 தடவைகள் சம்பியனாகியிருந்த நிலையில், இம்முறையுடன் சேர்த்து 8ஆவது சம்பியன் பட்டத்தைப் பெற்று அதிக பட்டங்களை வென்ற அணி என்ற பெருமையையும் தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டது.

அதேவேளை, இலங்கை அணி 6 தடவைகளும், பாகிஸ்தான் அணி 2 தடவைகளும் சம்பியன்களாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அரச நிறுவன மின்னஞ்சல் மீதான சைபர் தாக்குதல் பற்றி விசாரணை

அரச நிறுவனங்களின் மின்னஞ்சல் மீதான சைபர் தாக்குதல் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தொழில்நுட்பம் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பதில் அமைச்சர் கனக ஹேரத் விடுத்த அறிவித்தலுக்கு அமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 26ஆம் திகதி நடந்த சைபர் தாக்குதலால், அமைச்சரவை அலுவலகம் உட்பட பல அரச நிறுவனங்களின் மின்னஞ்சல்களின் தரவுகள் அழிக்கப்பட்டுள்ளன.

சைபர் தாக்குதல் தொடர்பில் தகவல், தொடர்பாடல் நிறுவனம் மற்றும் இலங்கை கணினி அவசர பதில் பிரிவிடம் இருந்தும் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக பதில் அமைச்சர் கனக ஹேரத் குறிப்பிடுகின்றார்.

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் திருத்தப்பட்ட வடிவம் வர்த்தமானியில்

புதிதாகக் கொண்டு வரப்படவிருக்கும் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் திருத்தப்பட்ட வடிவம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்தை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு கடந்த பெப்ரவரி 27ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியது.



# தாவடியில் பெட்ரோல் குண்டு வீசிய சம்பவத்தில் மூவர் கைது

யாழ்ப்பாணம், தாவடிப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்து நடத்தப்பட்ட பெட்ரோல் குண்டுத் தாக்குதலில் நடத்தி 5 பேர் காயமடைந்த சம்பவம் தொடர்பாக மூன்று இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் தாங்கள் கைது செய்துள்ளனர் என சுன்னாகம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெட்ரோல் குண்டு தாக்குதல் காரணமாக வீட்டுக்குள் இருந்த தந்தை, தாய், மகன் மற்றும் இரண்டு மகள்மார் தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முகத்தை மூடிய நிலையில் சென்ற சிலர் வீட்டை தாக்கிச் சேதப்படுத்தி விட்டு, பெட்ரோல் குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மோட்டார் சைக்கிள்களில் சென்று வீட்டின் பிரதான வாயில் கதவின் ஊடாக உள்ளே நுழைந்த நபர்கள், வீட்டுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவையும் தாக்கிச் சேதப்படுத்தியுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்கள் சத்தமிட்டதன் காரணமாக பெட்ரோல் குண்டை வீட்டுக்குள் வீசியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# மாணவர்களுக்கு ஆபாசப் படம் காட்டிய ஆசிரியர் கைதானார்!



இரத்தினபுரி – ஓபநாயக்க பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கு தொலைபேசியில் ஆபாசக் காணொலிகளைக் காண்பித்த குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஓபநாயக்க பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் தெயியந்தர பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நபரை நேற்று நீதிவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன என ஓபநாயக்க பொலிஸார் தெரிவித்துள்ளனர்.







# மயிலத்தமடு மேய்ச்சல் நிலத்தை மீட்டுத் தரக் கோரி சித்தாண்டியில் மூன்றாவது நாளாகவும் போராட்டம்

மட்டக்களப்பு சித்தாண்டி பிரதேச கால்நடை பண்ணையாளர்களின் அறவழிப் போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மூன்றாவது நாளாக சித்தாண்டியில் தொடர்ந்து நடைபெற்றது.

பண்ணையாளர்களும், கால்நடைகளும் நீண்டகாலமாக எதிர்நோக்கி வரும் அநீதிக்கு எதிரான அறவழிப் போராட்டமாக இத் தொடர் போராட்டம் இடம்பெறுகின்றது.

மட்டக்களப்பு செங்கலடி மற்றும் கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் எல்லையில் உள்ள தங்களது மேய்ச்சல் தரைப் பிரதேசமான மயிலத்தமடு, பெரியமாதவனைப் பரப்பில் தொடரும் சட்ட விரோத குடியேற்றம் தடுக்கப்பட்டு மேய்ச்சல் தரைகளை தங்களுக்கு மீட்டுத் தருமாறு கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த அறவழிப் போராட்டத்தை மயிலத்தமடு, பெரியமாதவனை கால்நடை வளர்ப்போர் அமைப்பு மற்றும் மட்டக்களப்பு கமல அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 15.09.2023.அன்று காலை சித்தாண்டி பிரதான வீதியில் ஒன்றுகூடியவர்கள் தங்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதி வழியாக கோஷங்களை எழுப்பியவாறும் பதாதைகளை தாங்கியவாறும் சித்தாண்டி முற்சந்தி பிள்ளையார் ஆலயத்தை வந்தடைந்தனர்.

அங்கு பிள்ளையாரை வணங்கி, தங்களது அறவழிப் போராட்டம் வெற்றி பெற வேண்டும் என சிதறு தேங்காய் உடைத்து அறவழிப் போராட்டத்தை ஆரம்பித்தனர். தங்களுக்கு நீதி கிடைக்கும் வரை இவ் போராட்டமானது சுழற்சியான முறையில் தொடருமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இந்தப் பிரதேசத்தில் தொடர்ச்சியான முறையில் கால்நடைகள் பெரும்பான்மை சமூகத்தினரால் துப்பாக்கிச் சூடு நடத்திக் கொல்லப்படுவதும், இறைச்சிக்காக வெட்டப்படுவதும், களவாடப்படுவதுமான நிலைமை நீடிப்பதாகவும், பண்ணையாளர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

பொலநறுவை மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்தோர் அப்பிரதேசத்திற்கு வருகை தந்து அத்துமீறிய குடியேற்றங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தங்களது பயிர்செய்கை நடவடிக்கைக்காக கால் நடை உணவாக உட்கொள்ளும் புற்களை உழவடித்து அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும், இதனால் கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரை அழிவடைந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவர்களது இச் செயற்பாட்டினால் பால் உற்பத்தி குறைவடைந்துள்ளதுடன் கால் நடைகளை விற்று விட்டு பிரதேசத்தினை விட்டு வெளியேறும் நிலை தங்களுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

போராட்டத்திற்கு வலு சேர்கும் வரையில் சித்தாண்டி பிரதேசத்தின் பொது அமைப்புக்கள். சிவில் அமைப்புக்களின் பிரதிநிகள், கமக்கார அமைப்புக்கள், இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ப.அரியநேத்திரன். ஞா.சிறிநேசன், முன்னாள் மாகான சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம், முன்னாள் மாகாண சபை பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் ஆகியோரும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளான சிவலோகநாதன், கு.வி. லவக்குமார் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பவானந்தனும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# விக்டோரியா வனப்பகுதியில் இருந்து வெடிபொருள்கள் பொலிஸாரால் மீட்பு

கண்டி – பதியபெலெல்ல வீதியின் 16 ஆவது கட்டைக்கு அருகிலுள்ள விக்டோரியா வனப்பகுதியிலிருந்து வெடிபொருள்கள் சில கண்டெடுக்கப்பட்டுள்ளன.

119 என்ற இலக்கத்தின் ஊடாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்த வெடிபொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கண்டுபிடிக்கப்பட்ட வெடிபொருள்கள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் தலாத்துஓயா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிதாக பஸ் சாரதிகள், நடத்துனர்களை சேவையில் இணைப்பதற்குத் தீர்மானம்

## இலங்கைப் போக்குவரத்து சபை அறிவிப்பு

பல்வேறு மோசடி சம்பவங்கள் காரணமாக மாதாந்தம் சுமார் 100 பஸ் நடத்துநர்கள் பணிநீக்கம் அல்லது பணியிடை நீக்கம் செய்ய நேரிடுள்ளது என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக பஸ் நடத்துனர்கள் 381 பேரை புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

சாரதிகள் 912 பேரையும் புதிதாக சேவையில் இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.



# ஆஸி விக்டோரியா விபத்தில் இலங்கையர் ஒருவர் மரணம்

ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியமையுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

விக்டோரியாவின் பெரிக் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்தவர் இலங்கையரான அனுருத்த பிரியங்கர கொடிப்பிலி (வயது49) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வாகனத்தின் சாரதியும் மற்றுமொரு பெண்ணும் சிறு காயங்களுக்கு உள்ளாகி உள்ளனர்.



வெள்ளை நிற சுபாரு காரும் நீல நிற போர்ட் காரும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை விக்டோரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். மாணவி நடந்து சாதனை



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சேர் ஜோன் டாபட் மெய்வல்லுநர் போட்டியில் 20 வயதில்குட்பட்ட பெண்களுக்கான வேக நடைப் போட்டியில் யாழ்ப்பாணம் - சுழிபுரம் விக்டோரியா கல்லூரியைச் சேர்ந்த மாணவி ஜே.தமிழரசி தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் இம் மாணவி நடை தூரத்தை 34 நிமிடங்கள் 40 விநாடிகளில் கடந்து இச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.



# 100 மீற்றர் ஓட்டத்தில் சாதித்த மன்னார் மாணவி பிறிண்டா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வடமாகாண விளையாட்டுப் போட்டியில் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் மன்னார் பறப்பங்கண்டல் மாணவி குறூஸ் பிறிண்டா புதிய சாதனை படைத்துள்ளார்.

வட மாகாண தடகள விளையாட்டுப் போட்டிகள் அண்மையில், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதன்போது, 12 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் மன்னார் பறப்பாங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையைச் சேர்ந்த டனிஸ் நிசாந்தன் குரூஸ் பிறின்ரா குரூஸ், என்ற மாணவி சாதனை படைத்துள்ளார்.

இவர், 100 மீற்றர் ஓட்ட தூரத்தை 14.60 விநாடிகளில் ஓடி முதலாம் இடத்தைப் பெற்று புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

அத்துடன், சிறந்த வீராங்கனையாகவும் தெரிவானார்.

# பாலமுனை அல்-ஹிக்மா வித்தியாலயம் மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு



(றியாஸ் ஆதம்)

அக்கரைப்பற்று வலய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாலமுனை அல்-ஹிக்மா வித்தியாலயம் மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

இப்பாடசாலை மாணவர்கள் அதீத திறமைகளை வெளிக்காட்டி 15 போட்டிகளில் வெற்றிபெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், மாகாண மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கலும், சீருடை அணிவிக்கும் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை (15) பாடசாலை அதிபர் ஏ.எல்.எம்.பாயிஸ் தலைமையில் பாடசாலையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ஏ.எச்.எம். தபறானி, விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் எம்.எம்.சாஜின் மற்றும் ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 18.09.2023




இன்று நீங்கள் புதிய கட்ட வளர்ச்சி நோக்கி முன்னேறுவீர்கள். முறையான திட்டமும் தொழில் சார்ந்த அணுகு முறையும் உங்கள் முயற்சியில் வெற்றியை ஏற்படுத்தும்.

உங்கள் பணியில் பெயரும் புகழும் பெறுவீர்கள். பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பை உயர்த்துவீர்கள். உங்கள் தரத்தை உயர்த்துவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்கை நோக்கி முயற்சி செலுத்துவீர்கள். இதன் மூலம் திருப்தியான பலன் கிடைக்கும். உங்கள் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

கடின உழைப்பின் மூலம் வெற்றி காண்பீர்கள். சக பணியாளர்களிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையான முறையில் உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். இது நல்லுறவு ஏற்பட வழி வகுக்கும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். கணிசமான தொகை சேமிப்பீர்கள். திருப்திகரமான நிலை பெறுவீர்கள்.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று ஏற்படும் பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப் படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்கள் தவிர்க்கப்பட வேண்டும். நம்பிக்கை உணர்வின் மூலம் நற்பலன் களைப் பெறலாம்.

இன்று மன திடமும் நம்பிக்கையும் வேண்டும். இதன் மூலம் தடைகளைசமாளித்து உங்கள் பணிகளை ஆற்ற முடியும்.

உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.கருத்து வேறுபாடு காணப்படும். நீங்கள் தேவையற்ற பேச்சுக்களை பேசுவீர்கள்.

இன்று பணம் குறைந்து காணப்படும். செலவுகள் அதிகமாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருப்பதாக உணர இயலாது. தொண்டை எரிச்சல் ஏற்படலாம்.




இன்று உங்களிடம் காணப்படும் உத்வேகம் காரணமாக நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். உங்கள் நலத்திற்கான பயனுள்ள முடிவை விரைவாக எடுக்கும் வகையில் உங்கள் மனநிலை இருக்கும்.

உங்களிடம் இருக்கும் சிறப்பான தகுதி காரணமாக இன்று உங்கள் செயல்களை சிறப்பாக செய்வீர்கள். உங்கள் பணிக்கு சிறந்த அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்கள் மனதில் ஓடும் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையேயான உறவு மேம்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாகவும் மகிழ்சிகரமாகவும் இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்க காண்பீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக உங்கள் ஆற்றல் சிறந்து காணப்படும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை நேர்மையான முயற்சி மூலம் அடைவீர்கள். உங்களிடம் உறுதியும் தைரியமும் காணப்படும். தன்னம்பிக்கை நிறைந்து காணப்படும்.

உங்கள் பணியில் நல்ல பெயரெடுப்பீர்கள். உங்கள் பணி செய்யும் முறை காரணமாக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். அவரை மகிழ்ச்சிக்குள்ளாக்குவீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று அதிக பண வரவு காணப்படும். உங்கள் வங்கியிருப்பை அதிகரிப்பீர்கள். உங்களின் வளர்ச்சி கண்டு மகிழ்வீர்கள்.

உங்கள் மனம் அனுசரணையான நிலையில் இருக்கும்.




இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்று சிறிது பாது காப்பின்மைஉணர்வும்,குறைந்தமகிழ்ச்சியும் காணப்படும். எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்க நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதனால் நீங்கள் உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை இழப்பீர்கள்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினை காணப்படும். உங்களிடம் இன்று சிறந்த மன நிலை காணப்படாது.எனவே இன்று இருவரும் பேசுவதை தவிர்ப்பது நல்லது.

இன்று உங்களால் பணத்தை பயனுள்ள வகையில் செலவழிக்க இயலாது. பண வரவு காணப்பட்டாலும் தேவையற்ற செலவுகள் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.




உங்கள் இலக்குகளை அடைய கடுமையாக உழைக்க வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். இன்றைய நாள் சிறப்பாக அமைய இன்று பொறுமை அவசியம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். சக பணியாளர்களிடம் கவனமாக இருக்க வேண்டும்.

இன்று உங்கள் காதலை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். என்றாலும் நல்ல புரிந்துணர்வு ஏற்பட குறைந்த வாய்ப்பே உள்ளது.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்கும். இன்றைய நாளை பயனுள்ள முதலீடுகள் செய்ய பயன்படுத்திக்கொள்ளுங்கள்

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கண் எரிச்சலால் பாதிப்புக்குள்ளாவீர்கள்.




இன்று சம்பவங்களை சகஜமாக எடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் வளர்ச்சியை தடுக்கும் எந்த உணர்விற்கும் இடம் கொடுக்கக் கூடாது. உங்கள் அணுகுமுறையில் விவேகம் வேண்டும்.

பணியிடச் சூழல் குறைந்த அனுகூலத்துடன் காணப்படும். சகபணியாளர்களுடன் பிரச்சினை காணப்படும். திட்டமிட்டு பணிகளை திறமையாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள இயலாது. நீங்கள் இன்று சிறிய விஷயங்களைக் கூட பெரிதாக எடுத்துக் கொள்வீர்கள். இது நல்லுறவை பாதிக்கும்.

இன்று பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகளும் காணப்படுகின்றது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

# இன்றைய ராசி பலன்கள் -18.09.2023




உங்களின் சொந்த முயற்சி மூலம் வெற்றி காண்பீர்கள். அதே சமயத்தில் திருப்தி குறைந்து காணப்படும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். பணிகளை விரும்பி ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையை சந்திப்பதில் மகிழ்ச்சியடைவீர்கள். இருவரும் பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். இது உங்கள் எதிர்காலத்தைப் பற்றி திட்டமிட உதவும்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்ய பயன் படுத்துவீர்கள்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று தடைகளும் தாமதங்களும் நிறைந்து இருப்பதாக உணர்வீர்கள். முக்கிய முடிவுகளை வேறு நாளைக்கு தள்ளிப் போடுவது நல்லது. நல்ல இசையைக் கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணிகள் சுமூகமாக நடக்க சகபணியாளர்களுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும்.

உங்கள் துணையுடன் சண்டையில் ஈடுபட வாய்ப்புள்ளது. அதனால் திருப்தியான மனநிலை காணப்படாது.

இன்று தேவையில்லாத செலவுகள் காணப்படும். வீட்டை புனரமைப்பதற்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

கால் வலி மற்றும் முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. ஓய்வாக இருக்க வேண்டும்.




இன்றைய செயல்களை மேற் கொள்வதை கடினமாக உணர்வீர்கள். இதனால் உங்கள் கட்டுப்பாட்டை இழப்பீர்கள். எனவே உங்கள் அணுகு முறையில் பொறுமையும் உறுதியும் அவசியம்.

இன்று உங்கள் பணிகள் சுமூகமாக நடக்காது. உங்கள் சக பணியாளர்களிடம் அமைதியை கையாளவும்.

உங்கள் துணை உங்களை புறக்கணிப்பதாக எண்ணுவீர்கள். அதனால் எரிச்சல் உணர்வை துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இதனால் மனதில் குழப்பம் காணப்படும். எதிர்பாராத வகையில் பணம் வந்தாலும் அதனை பயனுள்ள வகையில் பயன்படுத்த இயலாது.




உங்களிடம் உறுதி இருந்தால் இன்று வளர்ச்சி காண்பீர்கள். நம்பிக்கையுடன் இருந்தால் வெற்றி உங்கள் கதவைத் தட்டும்.

உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் உங்கள் பணியில் பிரதபலிக்கும்.

இன்று மகிழ்ச்சியான மாலைப் பொழுதாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் கானப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலை பொதுவாக சிறப்பாக உள்ளது. என்றாலும் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய கடன் வாங்க நேரலாம்.

உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி மற்றும் நேர்மறையான மனநிலை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS

KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPARK JA-ELA

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park